# நிமிஷாம்பா

# தேவியின் ஆலயம்

## சாந்திப்பிரியா





300 ஆண்டுகளுக்கு முன்னர் கர்நாடகாவில் கட்டப்பட்டகாக கூறப்படும் நிமிஷாம்பா தேவியின் ஆலயம் மும்மாடி கிருஷ்ண ராஜா வாடியார் என்பவரால் கட்டப்பட்டது என்று கூறுகின்றார்கள் என்றாலும் அந்த ஆலயம் ஆதி சங்கரர் காலத்தை சேர்ந்தது என்றும் கூறுகின்றார்கள். அதன் காரணம் அங்கு சன்னதியில் தேவியின் முன்னால் காணப்படும் ஸ்ரீ சக்கரம்தான். ஆதி சங்கரர்தான் இந்தியாவின் பல ஆலயங்களிலும் ஸ்ரீ சக்கரத்தை பிரதிஷ்டை செய்துள்ளார் என்பதினால் இந்த கருத்து உள்ளது. கஞ்சம் எனும்

புனித பூமியில், காவேரி ஆற்றின் தரைப்பகுதியில் இருந்து சற்றே உயரத்தில் அமைந்து உள்ளது இந்த ஆலயம். இங்குள்ள தேவி அன்னை பார்வதியின் அவதாரம் என்கின்றார்கள் . ஆலயத்துக்குள் செல்ல நன்கு சீராக வடிவமைக்கப்பட்டு உள்ள படிக்கட்டுக்கள் உள்ளன. ஆலயத்தை பார்க்கும்போதே அது மிகப் பழைமையான ஆலயம் என்பதை காண முடியும். ஆலயத்தின் உட்பகுதிகளும், சிலைகளும் பழைய காலத்தில் இருந்ததை போன்ற தோற்றத்துடன் காட்சி தருகின்றன . இந்த ஆலயத்துக்கு வந்து வேண்டிக் கொள்ளும் பக்தர்கள் காணிக்கையாக தேவிக்கு சேலை அல்லது வளையலை கொடுக்கின்றார்கள். நவராத்தரி பண்டிகை தினங்களில் இந்த ஆலயத்தில் கூட்டம் அலைமோதும்.

மூன்று சன்னதிகளைக் கொண்ட இந்த ஆலயத்தில் நிமிஷாம்பா தேவிக்கு ஒரு சிறிய சன்னதி உள்ளது. சிறிய அளவிலான நந்தியுடன், சிவபெருமானை பிரதிபலிக்கும் சிறிய அளவிலான சிவலிங்கமும் ஒரு கருவறையில் இருக்க, இன்னொரு கருவறையில் பகவான் லட்சுமி நாராயணர் வணங்கப்படுகிறார். மேல் கூரையில் இருந்து தொங்கும் ஒரு பெரிய பித்தளை மணி உள்ளது. அந்த மணியை ஆலய பூஜாரி அடித்ததும் அவர் பலிபீடத்தில் வைக்கும் பிரசாத்தை சாப்பிட எங்கிருந்தோ ஒரு காக்கை கூட்டம் ஒரே சீராக பறந்து வருகின்றது என்பது இந்த ஆலயத்தின் விசேஷ காட்சியாகும்.

ஆலய வரலாற்றுக் கதை என்ன என்றால் ஒருமுறை மன்னன் ஒருவன் முனிவரான முக்தானந்தா என்பவரிடம் மக்களின் நலனுக்காகவும், நாட்டின் நலனுக்காகவும் யாகம் அல்லது ஏதாவது பூஜையை செய்யுமாறு கூறினான். அவனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட முனிவரும் அதை செய்ய தக்க இடத்தை தேடிய பின்னர், தற்போது ஆலயம் உள்ள இடமே சரியான இடம் என முடிவு செய்து அங்கு யாகம் நடத்த ஏற்பாடுகளை செய்தார். யாகத்துக்கு தேவையான அனைத்து பொருட்களும் வந்து யாகமும் துவங்கியது. ஆனால்

யாகம் வெற்றிகரமாக நடந்து முடிந்து விட்டால் தாம் அழிந்து விடுவோம் என்று எண்ணிய 'ஜானு' மற்றும் 'சுமனதால' எனும் இரு அரக்கர்கள் யாகத்தை அழிக்க வந்து யாக குண்டத்தை அடித்து நொறுக்கி அனைத்து பொருட்களையும் சேதப்படுத்தினர். அதனால் வேதனை அடைந்த முனிவர் அந்த அரக்கர்களை அழித்து யாகத்தை காக்குமாறு நிமிஷாம்பா தேவியை வேண்டிக் கொள்ள அடுத்த நிமிடமே அந்த யாகத் தீயில் இருந்து வெளிவந்த நிமிஷாம்பா தேவியும் அந்த அரக்கர்களை அழித்து யாகத்தை தொடர உதவினாள். யாகமும் வெற்றிகரமாக நடந்து முடிந்து நாடும் வளமை பெற்றது.

அந்த முனிவரின் வேண்டுகோளை ஏற்று யாகத்தை நல்ல முறையில் நடக்க தேவி கருணை புரிந்ததினால் தனக்கு அங்கேயே ஒரு ஆலயம் எழுப்பி தன்னை வழிபடுமாறு தேவி ஆணையிட்டபடி, அந்த முனிவரும் மன்னனின் உதவியுடன் காவேரிக் கரையின் அதே இடத்தில் ஆலயம் ஒன்றை அமைக்க, அந்த ஆலயத்தில் கம்பீரமாக அன்னை நிமிஷாம்பா தேவி அமர்ந்தபடி காட்சி தருகிறாள்.

ஆலயம் உள்ள ஊருக்குள் செல்லும் பாதை கரடுமுரடாக, நன்றாக இல்லை என்பதினால், வெளியூர்களில் இருந்து அங்கு செல்லும் பக்தர்கள் மிக்க சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதினால் அவளுக்கு பெங்களூரில் ஒரு ஆலயம் அமைக்க 1959 ஆம் ஆண்டு பிறந்த, தேவியின் பக்தரான திரு ஹரிஷ் சாஸ்திரி என்பவர் முடிவு செய்தார். அவர் பட்டாபி படிப்பு பயின்றவர். பக்திமான் மற்றும் ஒரு தொழில் அதிபர்.

1995 ஆம் ஆண்டு அவருடைய தொழிலில் பெரிய சிக்கல் ஏற்பட்டது. பணமுடை ஏற்பட்டு தொழில் அழிந்து விடுமோ என்ற நிலைக்குச் சென்று விட்டது. பெற்றோர் தீர்க்க முடியாத நோயினால் பீடிக்கப்பட்டனர். அதை அனைத்தையும் சமாளிக்க முடியாமல்

திணறிக் கொண்டு இருந்தவரிடம் அவருடைய ஒரு நண்பர் நிமிஷாதேவி ஆலயத்திற்கு சென்று வழிபடுமாறு யோசனைக் கூறினார். அதை ஏற்று மைசூரில் இருந்து ஸ்ரீரங்கப் பட்டிணத்திற்கு காரில் சென்றவர் அந்த ஆலயத்தில் நுழைந்ததுமே எதோ அந்த இடம் தனக்கு மிகவும் பரிச்சயமான இடமாக இருந்தது போலவும், அந்த ஆலயத்தில் இருந்த ஒவ்ஒரு கல்லையும் தான் ஏற்கனவே பார்த்தது போலவே இருந்ததைக் கண்டார். ஆலயத்தில் நுழைந்து அன்னை பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்தார். ஆலயத்தில் இருந்து பிரசாதம் பெற்றுக் கொண்டு திரும்பினார். அங்கிருந்து பெங்களூர் செல்ல முடிவு செய்து காரில் பயணத்தைத் துவக்கியவருடைய காரில் இருந்த சக்கரங்கள் தாமாகவே கழன்று விழுந்து பாதையை உராசிக் கொண்டு கார் நின்று போயிற்று. ஆனால் அவருக்கு அடிபடவில்லை. மற்றவர்கள் உதவியுடன் அதை சரி செய்து கொண்ட பின் வியாபார விஷயமாக பெங்களூர் சென்று விட்டு திரும்பிய பொழுது எதோ தோன்றவே மீண்டும் நிமிஷாதேவி ஆலயத்திற்கு சென்றார். அங்கு தரிசனம் முடிந்த பின் மைசூர் திரும்பும் வழியில் இன்னும் ஒரு விபத்து ஏற்பட்டு அதே காரில் இருந்து வெளியே தூக்கி எறியப்பட்டார். வண்டி முற்றிலுமாக நாசம் அடைந்தும் அவருக்கு ஒன்றும் ஆகவில்லை. ஆகவே இனி அந்த ஆலயத்திற்கு செல்லக் கூடாது என முடிவு செய்தார்.

ஆனாலும் விதி விடவில்லை. அடுத்த பதினெட்டாம் நாள் மீண்டும் அங்கு செல்ல வேண்டும் என்று அவருடைய மனதில் தவிர்க்க முடியாத எண்ணம் ஏற்பட ஆலயத்திற்குள் சென்று கண்களை மூடிக் கொண்டு அன்னையே என்னை இருமுறை காப்பாற்றி விட்டாய். இந்த முறை விபத்து நேரிட்டால் என் உயிரை எடுத்துக் கொண்டு விடு என்று பிரார்தனை செய்தார். ஒரு பெரிய ஒளி வெள்ளம் அவர் கண்கள் முன்பு தோன்றி அவரை எழுப்பியது. கண்களைத் திறந்து பார்த்தவருக்கு நம்ப முடியவில்லை. ஒரு துறவி நின்று கொண்டு

அவர் நெற்றியில் குங்குமம் இட்ட பின் இனி உன்னுடைய காலத்தை அன்னையின் சேவையில் தொடர்ந்து கொண்டு இரு என்று கூறிய பின் மறைந்து விட்டார்.

அதனால் கலக்கமுற்றவர், அன்னையின் சன்னதியில் நுழைந்து அன்னையை நோக்க அங்கு அன்னையின் சிலை தென்படவில்லை. மாறாக அந்த தேவியே நின்று கொண்டு அவரை உட்காரும்படி ஆணையிட்டாள். அவளுடைய மூன்றாம் கண்களில் இருந்து வெளிவந்த ஒளி அவருடைய நெற்றியில் பாய ஆறு மணி நேரம் சமாதி நிலையில் அங்கே அமர்ந்தபடி இருந்தார். கண் முழித்து எழுந்தவரிடம் இனி திரும்ப பெங்களூ சென்று என் பணிகளைத் துவக்கு என ஆணையிட்டாள். அன்று முதல் அவர் அன்னையின் சக்தி பெற்ற ஆன்மீக குருவாக மாறி விட்டார். அதனால் அந்த மகான் இராஜராஜேஸ்வரி நகரில் அன்னைக்கு அகம விதிப்படி கட்டப்பட்ட ஒரு ஆலயத்தை நிர்மாணித்து உள்ளார்.

இந்த ஆலயம் மைசூர் நகரத்திலிருந்து 19 கி.மீ தூரத்திலும் பெங்களூர் நகரத்திலிருந்து 128 கி.மீ தூரத்திலும் அமைந்துள்ளது. நிமிஷாம்பா தேவியின் பல ஆலயங்கள் தென் இந்தியாவில் பல நகரங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவர் சில ஜாதியினரின் குடும்ப தெய்வமாகவும் வணங்கப்படுகிறார்.

# Nimishambha Devi Temple

## Santhipriya





Goddess Nimishambha Devi Temple, one of the most famous temples in Karnataka is reported to be 300 years old and constructed during the reign of Mummadi Krishnaraja Wodeyar. But the locals believe that it dates back to the years of Adi Sankaracharya since a Sri Chakra has been carved out on a stone kept in front of the deity. Only Adi Sankaracharya has established Sri Chakra in several of the temples across India, hence this opinion. Goddess Nimishambha temple is at the higher elevation on the levee of river Cauvery and at a distance of two kilometers from Srirangapatna bus stand in the eastern direction. The main deity of the temple is aspect of Goddess Parvathi, consort of Lord Siva. The place where the temple exists is called Ganjam which is considered to be a holy place. The

steps provided in the temple have been neatly cut on stone slabs to reach it. The interior of the temple is intact and the statues remain as they were installed at that time since it has not been rebuilt or renovated afresh by anyone. It is customary to offer a sari and bangle to the goddess while seeking favor from her in the form of prayer. Lots of devotees throng this temple especially during the period of Navaratri celebrations.

Daily pooja is performed for both Sri Chakra and Goddess Nimisha Devi. If one desire to perform pooja to Goddess Nimishambha Devi, they have to only do it to Sree Chakra and not to Devi directly. The pooja to Sri Chakra is performed with Kunkum (Vermillion). Goddess Nimishambha Devi earned the name Nimishambha since the belief has been that Nimishambha Devi clear all problems and issues of devotees within minutes when prayed to her in this temple. Nimisha means a minute. People worship Goddess Nimishambha in this temple to remove the hurdles in the marriage proposals which have been dragging on for years, and once they offer prayers here the proposals gets through very quickly.

The temple has three small sanctums one of which is occupied by Goddess Nimishambha. Lord Shiva is also seen enshrined in a sanctum in the form of a small Shiva Ling along with divine Nandi. Lord Lakshmi Narayana is also worshipped in another sanctum. There is a big brass bell hanging from the ceiling, which is rung by the priest himself after placing the `Bali Bhojanam on the Bali Peet for the crows to eat. It is unique sight to see that once the bell is rung, the crows come down in an orderly way to partake it!

The legend of the temple goes like this. Once upon a time, the King asked Sage Muktananda to perform Yagna or Homa for the prosperity of his state and welfare of the folks. After weighing all aspects, the sage came to the conclusion that the best place to perform such pious act would be the banks of Cauvery near the present temple site in Srirangapatna. He made preparations for the conduct of the Yagna to seek the grace of the Goddess. But once the Yagna began, two asuras named Janu and Sumanthala, began disturbing the Yagna because they feared that if the Yagna was performed successfully, they would perish. Therefore they destroyed the Yagna Kund and threw away all the material stored for the Yagna. Disturbed by their unruly behavior, the sage prayed to Goddess Nimisha Devi to protect them to continue the Yagna. In the next minute of his sincere prayer, the Goddess came out of the fire of the Yagya Kund and destroyed the two asuras and ensured that the intended Yagya was performed successfully and the state prospered by the grace of the Goddess Nimishambha.

Since the goddess accepted his prayer and blessed him to perform the Yagya successfully she directed him to establish a temple for her in the same place and worship her. The Saint therefore ensured through the King to establish a temple for her in the same place, Ganjam, where the Yagya was performed. She is seen seated majestically in that temple in the bank of river Cauvery.

On seeing the woes of the devotees who were struggling to visit the Nimishambha temple which was in those days in terrible terrain with bad roads, one of the devotees of Nimishambha namely Shri Harsha Shastri, who was born in 1959, built

a temple for Nimishambha in Rajarajeswari, Bangalore. Harsha Shastri, a graduate was very pious and became a businessman.

1995 saw a major crisis in his career. The industry has gone to the brink of bankruptcy. His parents were afflicted with an incurable disease. Unable to meet all ends, Shri Harsha Shastri on the suggestion of one of his friends, he went to Goddess Nimishambha Devi temple and offered worship. He drove his car by himself up to the temple. Once he reached the temple, he felt as if the place was quite familiar to him including every stone in the temple. He felt the same feeling as he went and stood in each nook and corner of the temple. He was unable to know the reason, entered the sanctum, prostrated before the deity, offered worship and returned back with the offerings from the temple. From there, he proceed to Bangalore. On way the wheels of the car strangely came off bring the car to a halt, but luckily he was not hurt. After fixing it with the help of others, he went to Bangalore on business and when he returned, on urge to visit the temple again he went to Nimisha Devi temple. He offered worship to the Goddess and proceeded to Mysore. On way again he met with another accident in which he was thrown off from the car. Therefore he firmed up his mind not to visit the temple anymore.

But fate would not allow him to remain so. When daily he got an urge to visit the temple again, on the eighteenth day, he went to the temple for the third time and prayed with closed eyes that on earlier two occasions when he visited he met with the accidents and this time if she felt so she should take away his life instead of allowing him to meet with an accident. Suddenly when he felt as though a flash of light struck his eyes, he opened his eyes to only see a saint standing before him.

The saint applied a mark on forehead with vermillion suddenly disappeared after advising him to begin serving to Goddess Nimishambha Devi.  Feeling jittery, he went into the sanctum to closely look at the idol of Devi. Alas he found the Devi herself seated there in human form instead of the idol. She asked him to remain seated there for some time and the rays of light emanated from her third eye entered into his body, and he remained seated there in the state of Samadhi for six hours.  She commanded that he go back to Bangalore and continue his duties rigorously. The scene just ended. He went back to Bangalore and turned into a spiritual Guru and constructed a temple for Goddess Nimishambha Devi which is in Rajarajeswari Nagar.

This temple is situated about 19 Kms distance from Mysore City and 128 km Distance from Bangalore City. The temples for Goddess Nimishambha Devi can be seen established in many cities in many of the southern states. She is also worshipped as the family deity of some castes.